

பாமாலை 104 A என் மனது துடிக்குது

1 என் மனது
துடிக்குது
குலை பதைத்து நோகும்;
தெய்வ மைந்தனின் சவம்
கல்லறைக்குப் போகும்

2 ஆ அவரே
மரத்திலே
அறையப்பட்டிறந்தார்;
கர்த்தர் தாமே பாவியின்
சாபத்தைச் சுமந்தார்.

3 என் பாவத்தால்
என் நீங்கினால்
இக்கேடுண்டாயிருக்கும்;
ஆகையால் என்னுள்ளத்தில்
தத்தளிப்பெடுக்கும்

4 என் ஆண்டவர்,
என் ரட்சகர்
வதைந்த மேனியாக
ரத்தமாய்க் கிடக்கிறார்
என் ரட்சிப்புக்காக

5 வெட்டுண்டோரே,
ஆ உம்மையே
பணிந்தென் ஆவி பேணும்;
அகிலும் என் நிமித்தம்
நான் புலம்ப வேணும்

6 குற்றமற்ற கர்த்தாவுட
காணலாம் ரத்தம் ஊறும்;
மனஸ்தாபமின்றி ஆர்
அதைப் பார்க்கக் கூடும்?

7 ஆ, இயேசுவே,
என் ஜீவனே,
நீர் கல்லறைக்குள்ளாக
வைக்கப்பட்டதை த் தினம்
நான் சிந்திப்பேனாக.

8 நான் மிகவும்
எந்நேரமும்
என் மரண நாள் மட்டும்,
என் கதையாம் இயேசுவே,
உம்மை வாஞ்சிக்கட்டும்.